666 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அல்லது 333 அகதிகள் குடும்பங்களைக் குடியமர்த்த இத் திட்டம் வகை செய்கிறது. 31–12–1971 வரை, இத் திட்டத்திற்காக ரூ. 8·92லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 272.60 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இலங்கை அகதிகள் 62 பேர் இதில் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர். 28 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 98 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : அவர்கள் ரப்பர் தொழிலிலும் தேர்ச்சிப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ரப்பர் தோட்டம் ஏற்படுத்த வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். பர்மாவில் இருந்து வரக்கூடியவர்களுக்குச் சிறு வியாபாரம், விவசாயம் ஆகிய இரண்டும் தான் பழக்கமான தொழில். இலங்கையில் இருந்து வருகிறவர்களுக்குத்தான் ரப்பர் தோட்டத் தொழிலில் நல்ல பழக்கம் இருக்கிறது. பர்மாவில் இருந்து வருகிறவர்களுக்கு சிறு கடைகள் வைக்க கடன் தொகை உதவப்படுகிறது. விவசாயம் செய்யவும் வசதிகள் தரப்படுகின்றன.

*Apatite in Pennagaram Block.*

*783 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that Apatite (a fertiliser preparing new material) is found in large quantities at Pennagaram Block, Dharmapuri District ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். தர்மபுரி மாவட்டத்தில் ஒகனேகல்லுக்கருகில் அப்படைட் என்னும் கனிப்பொருள் சிறு சிறு துகள்களாகவும் படிவங்களாகவும் கேல்ஷிபைரஸ் என்னும் பாறையில் காணப்படுகிறது. மேற்படி கனிவளத்தைக் கண்டறிய மாநில புவி ஆராய்ச்சிப் பிரிவு விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறது. இவ் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நீலகிரி மலையில் தேன் இரும்பு

* 784 வினா— திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மலைத்தொடரில் கிடைக்கின்ற தேன் இரும்பைக் கொண்டு மேட்டுப்பாளையத்தில் தேன் இரும்பு உருக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1973 மார்ச் 29]

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

சென்னை-கன்னியாகுமரி கடலோரச்சாலை.

* 785 வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதிதாக அமைக்கப்பட்டு வரும் சென்னை—கன்னியாகுமரி கடற்கரைச் சாலையில் இதுவரையில் ஏற்பட்டுள்ள மேம்பாட்டு வேலைகள் யாவை?

(இ) மேற்கண்ட சாலையில் எந்தெந்த இடங்களில் புதிதாகப் பாலங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சபை முன் ஓர் அறிக்கை க வைக்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிறுபாசனத் திட்டங்கள்

*786 வினா— திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகுபொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

1971–72-ம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் எத்தனை சிறு பாசனத்திட்டங்கள் எடுத்துக் கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 68 திட்டங்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : அந்தத் திட்டங்களைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மொத்தம் 68 திட்டங்கள் இருக்கின்றன. நான் கனம் உறுப்பினருக்குத் தனியாகக் காட்டி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதுபோல அமைச்சர்கள் சுருக்கமாகப் பதில் சொன்னால் நிரம்ப நேரம் மிச்சமாகும். அதிகத்துணைக்கேள்விகள் போடமுடியும். ஒரு துணைக் கேள்விக்கு ஒரு நிமிடத்திற்கு மேல் பதில் சொல்கிற காரணத்தினால்தான் பல துணைக் கேள்விகளுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுகின்றன. நீளமான விடையாக இருந்தால் அதை அச்சிட்டு முதலில் கொடுத்து விட வேண்டும். துணைக்கேள்விகளும் சரி, பதில்களும் சரி சுருக்கமாக இருப்பதுதான் அதிகம் பேர்களுக்குத் துணைக்கேள்வி போட வாய்ப்பளிக்கும்.

---

க 687–697 ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது